## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.163/2019

**2025 ஆம்** வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இருதயமேரி | ஜாதி | : | |
| க.பெ | : | சேசுராஜ் | தொழில் | : | வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | வீரக்கல் மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 80/2025 |
| தேதி | : | 18.11.2025 | | | |

### 10வது பிரதிவாதி தரப்பு விசாரணை

உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 நீங்கள் தாக்கல் செய்த ஆவணமா என்றால் எனக்கு படிக்க தெரியாது, அதனால் தெரியவில்லை. தாவா சொத்துக்கு வடக்கு பக்கத்தில் சின்னப்பன் மகன்கள் அருளப்பன், பால்ராஜ் ஆகியோரின் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். சின்னப்பன் உங்கள் தத்தையுடன் பிறந்த மூத்த சகோதரர் என்றால் சரிதான். அருளப்பன், பால்ராஜ் ஆகியோர் உயிருடன் உள்ளார்களா என்றால் அருளப்பன் இறந்துவிட்டார், பால்ராஜ் உயிருடன் உள்ளார்.

அருளப்பனின் வாரிசுகள் யார் யார் என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் உங்கள் தந்தையுடன் பிறந்த மூத்த சகோதரர் சின்னப்பன் என்பவரையும், அவருடைய வாரிசுகளையும் கொடிவழி ஜாபிதாவில் நீங்கள் காட்டவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் சின்னப்பன் மற்றும் அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் அருளப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பது தான் உங்கள் வழக்கு என்றால் சரிதான்.

அருளப்பனின் வாரிசுகளையும், பால்ராஜின் வாரிசுகளையும் இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அருளப்பன் மற்றும் பால்ராஜின் வாரிசுகளையும், அவர்களின் தந்தை சின்னப்பன் என்பவரையும் நீங்கள் தாக்கல் செய்த கொடிவழி ஜாபிதாவான வா.சா.ஆ.1 ஆவணத்தில் நீங்கள் சேர்க்கவில்லை என்பதால் வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உங்களது தந்தை சந்தியாகு, தாயார் ஆரோக்கியம்மாள் ஆகியோருக்கு சிறுமணி அம்மாள் என்ற மகள் இருந்தார் என்றால் சரிதான், அவர் தற்போது உயிருடன் இல்லை.

சிறுமணி அம்மாளின் கணவர் பெயர் அற்புதம் என்றால் சரிதான். அவர்களுடைய வாரிசுகளான ஸ்டெல்லாமேரி, ஜோசப், ராயப்பன், பிரான்சிஸ், ரோசாலி ஆகியோர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரிதான். 11.07.1947 கிரைய ஆவணப்படி தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அருளப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 11.07.1947 தேதியிட்ட கிரைய பத்திரமான வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு கிரைய பத்திரங்கள் இல்லை என்றால் சரிதான்.

அருளப்பனுக்கு பூர்வீக வழியில் எந்த சொத்தும் பாத்தியமில்லை என்றால் சரிதான். வழக்குரையில் உள்ள சொத்துக்களான 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களான சர்வே எண்.68/14, சர்வே எண்.68/17, சர்வே எண்.68/21 ஆகிய நிலங்கள் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன சர்வே எண்களில் அடங்கிய நிலங்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராது, நிருபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துள்ளீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.68/14, சர்வே எண்.68/17, சர்வே எண்.68/21 ஆகியவை எவ்வாறு பாத்தியம் என்று உங்களுடைய வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சரியான சொத்து விபரங்களை வழக்குரையில் குறிப்பிடாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

பிராது 5வது அயிட்ட சொத்தான சர்வே எண்.116/1D பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் தெரியும். சர்வே எண்.116/1D பற்றி வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.676 உங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.676 ஐ உங்களுடைய பிராதில் 5வது அயிட்ட சொத்தில் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். பட்டா எண்.676 யாருடைய பெயரில் உள்ளது என்று பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சர்வே எண்.116/1D ஆனது முழு சர்வே எண் கொண்டதா அல்லது உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.68/14, சர்வே எண்.68/17, சர்வே எண்.68/21 ஆகிய சொத்துக்கள் வருவாய்த்துறை ஆவணங்களில் யார் பெயரில் உள்ளது என்பது பற்றி வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 1வது மற்றும் 2வது அயிட்ட சொத்து பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் தெரியும். 2வது இலக்க சொத்தில் செண்ட் 23ல் கிரையமான 15 செண்ட் நீங்கலாக மீதமுள்ள செண்ட் 8 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரையான 15 செண்ட் யாருக்கு விற்க்கப்பட்டது, எப்போது விற்கப்பட்டது என்றால் மரியசூசை என்பவர் 10 வது பிரதிவாதிக்கு விற்றார்.

நீங்கள் சொல்வது போல் மரியசூசை என்பவர் 15 செண்ட் இடத்தை 10ஆம் பிரதிவாதிக்கு விற்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்தான சர்வே எண்.68/17 க்கு கட்டுப்பட்ட 9 செண்ட்டில் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட் வீடு

மற்றும் காலியிடம் ஆகியவற்றில் யார் உள்ளார்கள் என்றால் 10 ஆம் பிரதிவாதி உள்ளார். 10 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கான கிரைய ஆவணமாக உங்களது தரப்பில் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2 அயிட்ட சொத்து மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.116/1F, 116/1E என்ற இரண்டு சர்வே எண்கள் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் சர்வே எண்.68/14, சர்வே எண்.68/17, சர்வே எண்.68/21 அந்த பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எனவே, சர்வே எண்.68/17 ல் உள்ள ஓட்டு வீட்டில் யார் உள்ளார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா 4வது அயிட்ட சொத்தில் பொது பத்தில் ஒரு பாகம் என்று கூறியுள்ளீர்கள், மீதமுள்ள 9 பாகம் யாருக்கு என்பது பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 5 வது அயிட்ட சொத்தில் சர்வே எண்.116/1D ல் ஏற்கனவே கூரை வீடு இருந்தது, தற்போது இல்லை என்றால் சரிதான். அந்த கூரை வீட்டில் யார் முன்பு இருந்தது என்றால் நாங்கள் தான் இருந்தோம். 3 மற்றும் 5வது அயிட்ட சொத்துக்களில் உள்ள வீடுகளுக்கான வீட்டு வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

அருளப்பன் கிரையம் பெற்ற கிரைய பத்திரமான வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.115/2 ல் செண்ட் 81 ல் பிரிவினை இல்லாத 40 1/2 செண்ட் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன விபரத்தை தான் உங்களுடைய வழக்குரையிலும் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அதேபோல அருளப்பன் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.114/1 ல் செண்ட் 70 ல் பிரிவினை இல்லாத பாதி 35 செண்ட் என்று தான் அருளப்பன் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதே சொத்து விபரத்தை தான் உங்கள் வழக்குரையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

அதேபோல சர்வே எண்.116/1 ல் ஏக்கர் 2 ல் செண்ட் 56 ல் பிரிவினை இல்லாத பாதி ஏக்கர் 1 செண்ட் 28 என்று சொல்லி தான் அருளப்பன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதே விபரத்தை தான் வழக்குரையிலும் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். நான்கு மால் எதும் குறிப்பிட்டு வா.சா.ஆ.2 ஆவணத்தில் அருளப்பன் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். தாவா 2 முதல் 5 வரையிலான அயிட்ட சொத்துக்களின் சொத்து விபரங்களில் நான்கு மால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள பிராது சொத்துக்கள் சம்மந்தமாக மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக உங்கள் காலத்திலும், அருளப்பன் காலத்திலும், சந்தியாகு காலத்திலும் எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரிவினை இல்லாத சொத்து என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு பின்பு பிரிவினை ஆகியுள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். அருளப்பன் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்துக்களை அருளப்பன் எவ்வாறு அனுபவித்து வந்தார் என்று நீங்கள் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அருளப்பன் பெயரில் உள்ள பட்டா எதையும் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

அருளப்பன் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததற்கான விபரங்களையும் உங்களுடைய வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தின் நான்கு எல்லைகளாக தற்போது உள்ள நான்கு எல்லைகளை நீங்களாகவே குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்திற்கு உள்ள நான்கு மால்கள் குறித்து வருவாய்த்துறையினரிடம் சான்று எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தில் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றும், அது குறித்த விபரங்களை நீங்கள் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 09.04.2008 அன்று மரியசூசை என்பவர் 10வது பிரதிவாதியான புளோரா என்பவருக்கு வா.சா.ஆ.3 ஆவணமான கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதியான மரியசூசை, அருளப்பன் கிரையம் பெற்ற முழு சொத்தையும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor